# ஆத்ம ஜோதி



செல்வச் சந்நிதி கோயில்



# ★ ஆத்ம ஜோதி ★

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்,

சோதி 12 | சார்வரி ஸு ஆவணி மீ 1-ந் உ (16-8-60) | சுடர் 10

## பொருளடக்கம்


| | |
|---|---|
| வேலாயுதக்கண்ணி | 289 |
| திருச்சந்நிதித் தோத்திரமாலை | 290 |
| சந்நிதி முருகன் | 291 |
| செல்வச் சன்னிதி ஆலயத்தின் சீர்மிகு வரலாறு | 294 |
| கதிர்காமம் | 298 |
| ஆரோக்கியமும் உபவாசமும் | 302 |
| சுத்தானந்தரின் கடிதம் | 304 |
| ஆ-சிரமம் வேண்டாம் | 308 |
| லிகித நாம ஜெப மகா யக்ஞம் | 312 |
| திவ்ய ஜீவன சங்க நிகழ்ச்சி | — |
| பாலையடி ஸ்ரீ வாலவிக்னேஸ்வர துதி | 313 |
| நாம லிகித ஜெபம் | 317 |


## ஆத்ம ஜோதி சந்தா விபரம்.


ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச்சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. (சிலோன்)

# வேலாயுதக் கண்ணி.

1 அஞ்சுமுக மாற்றி யன்பர்க் காறுமுகங் காட்டவந்த
தஞ்சமலர்ப் பாதா பொற்சந்நிதி வேலாயுதனே.

2 கல்லாத மூடனுக்கோர் காட்சியுண்டோ மாட்சி நெறி
சல்லாபா போற்று செல்வச்சந்நிதி வேலாயுதனே.

3 ஆறுமுகத் தையாவே யன்பார் பொற்சந்நிதியாய்
தேறுமுக மாகவருள் செய்வாய் வேலாயுதனே.

4 துர்க்குணங்கணிக்கி யெனைச் சுத்தநிலை மேவவைப்பாய்
சற்குணத்தர் போற்று செல்வச்சந்நிதி வேலாயுதனே.

5 கண்கலக்கந் தீர்த்தென்னைக் காப்பாயென வடைந்தேன்
விண்கலக்கந் தீர்த்த செல்வச்சந்நிதி வேலாயுதனே.

6 கொல்லா விரதநிலை கூடியினி வாழ்வதென்றோ
சொல்லாய் பொற்சந்நிதியார் சோதி வேலாயுதனே.

7 ஏழையென வுலக மோசாமற் போதநெறி
தாழாதருள் செல்வச்சந்நிதி வேலாயுதனே.

8 துரையே யுனைப்பணிந்தேன் துன்பமெலாந்தீர்க்கத்
தரையார்பொற் சந்நிதியிற் சார்வேன் வேலாயுதனே.

9 பூவனப்பொற் சந்நிதிவாழ் புண்ணியனே தொண்டுசெயாப்
பாவியெனக்கு முண்டோ பண்புசொல் வேலாயுதனே.

10 கண்ணீர் சொரியவிரு கைகூப்பித் தெண்டனிட்டார்க்
கண்மையனுவனுன் செல்வச்சந்நிதி வேலாயுதனே.

11 போற்று செல்வச் சந்நிதியாய் பொற்பார் நக்கீரருக்குச்
சாற்றரிய துன்பந் தவிர்த்தாய் வேலாயுதனே.

12 நீ முகம் பாராவிடிலோ நேரார் பொற்சந்நிதியாய்
யார் முகம் பார்ப்பே னருள்வடி வேலாயுதனே.

# திருச்சந்நிதித் தோத்திர மாலை

1 ஒன்றறி யேனென் னுளக்குறை யாவு முனக்குரைக்கச்
சென்றடைந் தேன்செல்வச் சந்நிதி மேவிய தேசிகனே
நன்றறி யாதபுன் னாய்நிகர்ப் பேனை நவையகற்றி
உன்றயைக் காவினி யாக்குவை யோவென் னுயிர்க்குயிரே.

2 ஆனேர்செல் வச்சந் நிதிபர சேநின் னடைக்கலமென
பரனேசங் காட்டி யருளுமை யாவிந்தப் பாருலகிற்
றுனேர் துணையொன் றிலைதேனன் வேதவர் பூரணனுங்
கோனே யடியார்க் கெளியவ னேயென் குலதெய்வமே.

3 பரிமளத் தீர்த்தர் படிந்தாடி யன்பர்கள் பாடுதுதி
அரிமல ரோன்சுரர்க் காரமு தாகவு மன்புகொள்ளாத்
திரிமனக் கேடு சகிக்க வொண்ணாதினிச் செய்வதென்யான்
சொரிமலர் சூழ் செல்வச் சந்நிதி நீதத் துரையரசே.

4 நல்லார்க்கு நல்ல துணையான ஞானத் தயாபரனைப்
பொல்லாங்கு தீர்க்குங் குருநா தனைமறை போற்றுகின்ற
கல்லா லமர்செல்வச் சந்நிதி மேவிய காவலனைச்
சொல்வா யுருகிப் பணிவா யினியென் றுயர் நெஞ்சமே.

5 அன்பா லுருகு மடியார் தமைக்கண் டுருகியருள்
மின்பால் விளங்கிய வேலவ னேவினை யான்மெலிந்தே
உன்பா லடைந்தே னுனக்கே பரமினி யோங்கு தெய்வச்
பொன்பால னேசெல்வச் சந்நிதி மேவிய பூரணனே.

6 போதத் திருமணி போற்றிசைக் குஞ்செல்வச் சந்நிதிபோய்ப்
பாதத் திருமணி கொஞ்சமின் னேரிரு பாலமர்கோ
மேதத் திருமணி மஞ்ஞையின் மீதுசெவ் வேல்சிறந்த
வேதந் திருமணி யொன்றுகண் டாலென்சொல் வேண்டுவதே.

ஓம்

# சந்நிதி முருகன்

(ஆசிரியர்)

சந்நிதி என்ற சொல்லுக்கு அருகு, சமீபம், மூலஸ்தானம் என்னும் பொருள்களுண்டு. யார் சந்நிதி முருகனை நினைக்கின்றார்களோ? அவர்களுக்கருகே முருகன் ஓடோடியும் வந்து விடுகின்றான். அல்லது அவர்களைத் தம்மருகே இழுத்துக் கொள்ளுகின்றான். இவ்வுண்மையை எவரும் தமது சொந்த அநுபவத்தில் இன்றும் உணரலாம். இப்பேருண்மையை அநுபவித்த பக்தர் ஒருவர் பின்வருமாறு பாடுகின்றார்.

"செல்வச்சந் நிதியென்னச் செய்வினையெ லாம்மாளும்
செல்வச்சந் நிதியென்னத் தீராநோய் தீர்ந்துவிடும்
செல்வச்சந் நிதியென்னச் சித்தியெலாங் கைகூடும்
செல்வச்சந் நிதிவேலோன் திருவருட் சிறப்பினாலே."

ஈழத்தின் தென்பால் அமைந்த கதிர்காமத்திற்கு எவ்வித மகிமையுண்டோ அத்தகைய மகிமை ஈழத்தின் வடபால் அமைந்த சந்நிதிக்குமுண்டு. பூஜை முறையிலேயே இரண்டுக்கும் ஒற்றுமையுண்டு.

சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

என்கிறார் அருணகிரியார். சும்மா இருத்தலின் முதற்படி மௌனமாகும். இருகோயில்களிலும் இன்றும் வாய் கட்டியே பூஜை நடைபெறுகின்றது. செல்வச் சந்நிதியை சின்னக்கதிர் காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை எனப் பல திருநாமங் களாற் போற்றுவர். கதிர்காம முருகன் சாதிசமய வேறுபாடற்ற சந்நிதிப் பெருமையுடையதுபோல சந்நிதி முருகனும் சாதி, குலம், கோத்திர முதலிய பேதங்களற்று அருள் புரியும் சந்நிதிப் பெருமையுடையவர்.

"ஆறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே."

என்று, குமரகுருபர சுவாமிகளால் கொண்டாடப்பெற்ற கலியுகவரதராம் முருகப் பெருமானுக்கு இந்தியாவில் ஆறுபடை வீடுகள் இருப்பதுபோலவே, எமது ஈழநாட்டிலும் ஆறு திருப்பதிகள் இருக்கின்றன.

அவையாவன: குறிஞ்சியில் கதிரைமலை, உகந்தமலை; நெய்தலில் மாவிட்டபுரம், கந்தவனம், செல்வச் சந்நிதி, மருதத்தில் நல்லூர். கதிர்காமம், சந்நிதி ஆகிய இருதலங்களில் வழிபாட்டு முறையிலும் அர்ச்சகர் ஒழுக்கத்திலும் நிறைய ஒற்றுமை உண்டு. சாதி சமயம், உயர்வு தாழ்வு, சிறியோர் பெரியோர் என்ற வேற்றுமை இரண்டிடத்துங் கிடையாது.

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமானே, வேண்டுவார் வேண்டுவதை அளிக்கும் நோக்கால், சுத்தசைதன்ய பரமாத்ம சாட்சாத்கார சிவானுபூதிச்சொரூப நிலையில் இவ்விரு ஸ்தலங்களிலும் அருளாடல் புரிவது பக்தர் கோடி அநுபவித்துணர்ந்த உண்மையாகும். கதிர்காமத்து இறைவன் தனது திருவருள் விலாசத்தைப் பேடகத்தின் கண்ணே வைத்திருக்கின்றான். செல்வச் சந்நிதியில் தனது வேற்படையின் கண்ணே வைத்திருக்கின்றான்.

தில்லையைக் காண முத்தி, அருணையை நினைக்க முத்தி என்பர். கதிர்காமத்தைக் காணப் பக்தி, சந்நிதியை எண்ணப் பக்தி என்பது பல பக்தர்கள் கண்ட அநுபவமாகும். முருகனடியார்களுடைய ஆனந்தக் கூத்தை இரு இடங்களிலும் நன்கு அநுபவிக்கலாம். ஈழத்திலுள்ள எல்லா ஆலயங்களையும் ஒன்றுசேர்த்தாலும் இவ்விரு ஆலயங்களிலுமுள்ள காவடிகளின் தொகை மிகக் கூடுதலாகவே உள்ளன.

கடவுள் இல்லையென்று நாஸ்திகம் பேசிய பல அன்பர்கள் இவ்விரு ஆலயங்களுக்கும் வேடிக்கை பார்க்கச்சென்று முருகன் திருவருளால் இழுப்புண்டு கண்ணீர்பெருக்கி உள்ளம் உருகி முருகன் அடியார்களாக மாறியுள்ளார்கள்.

சந்நிதி என்ற சொல்லை சம்+நிதி என்று பிரித்துப் பொருள் கூறினால் அதிக செல்வம் எனப் பொருள்படும். தம்மை நாடிவந்தோருக்கு அருட் செல்வத்தை அள்ளி இறைப்பதில் சந்நிதி முருகனுக்கு அவனே தான் இணை. பக்தர்கள் பலர் எத்தனையோ நூற்றாண்டு காலமாக ஓதிய முருகநாம அலைகள் அச்சூழலில் நிறைந்துள்ளன. எத்தகைய மனிதனும் அந்த முருகநாம அலைக்குள்ளே அகப்படும்போது வாய்விட்டு முருகா என்று சொல்லாமல் இருக்க முடிவதில்லை. பாடாதாரையெல்லாம் மெய்மறந்து பாடச்செய்கின்றான் முருகன்.

எந்த ஒரு நாளாவது அங்கு அன்னதானம் நடைபெறுதிருந்தது கிடையாது. முருகனை நாடிச் சென்றவர் எவராவது பசியோடு சோறு இல்லையே என்று வீடு திரும்பியது கிடையாது. முருகன் ஏழை பங்காளன் என்பதை அங்கு நேரிற் சென்று பார்த்தால் தெரியும். தினந்தோறும் வீட்டில் சமைக்கும் அரிசியில் ஒருபிடியை சந்நிதியான் சந்நிதியில் அன்னதானத்திற்கென மீதிப்படுத்திவைப்பது வழக்கம். அப்படிச் சேர்த்துவைத்த அரிசி மூலமே வருடத்தின் பெரும்பகுதி நாட்களில் அன்னதானம் நடைபெறுகின்றன. தினமும் முருகனுக்கே அர்ப்பணஞ் செய்யப்படும் அரிசியைக்கொண்டு செய்யும் அன்னதானத்திற்குத் தனிப்பட்டதோர் சக்தி உண்டு. விசேட வைத்திய விற்பன்னர்களால் கைவிடப்பட்ட நோய்களும், பரம்பரை நோய்களும் சந்நிதி முருகன் முன்னிலையில் சுகமடைந்த செய்திகள் பல உள. சந்நிதி முருகன் சந்நிதானத்தில் ஒரு நிமிட நேரமாவது மன மடங்கித் தியானித்தால் எத்தனையோ புதிய அநுபவங்களை உணரலாம்.

முருகன் அருள் பொலிக!



# செல்வச் சந்நிதி ஆலயத்தின் சீர் மிகு வரலாறு.

(கே. வி. சாமி)

ஈழத்தில் புனிதம் வாய்ந்த கோயில்களிலே பெருமை வாய்ந்தது செல்வச்சந்நிதி. இது வடமராச்சிப் பகுதியின் மேற்கெல்லையாக அமைந்திருக்கும் அழகிய சின்னஞ் சிறு கிராமமாகிய தொண்டமானாற்றில் அமைந்துள்ளது. இவ்விடத்தின் கண் முருகப்பெருமான் பள்ளிகொண்டிருப்பதே ஒரு தனி அழகு. இதனால் அவ்வூர்ச்சனங்களுக்கே ஒரு பெருமை. இப்புனித ஸ்தலத்தின் மேற்கெல்லையில் சரித்திரப் புகழ் வாய்ந்த தொண்டமானாறு முருகனை நாடி வரும் பக்த கோடிகளுக்கு ஒரு புனித நீராக அமைந்திருக்கிறது. சுற்றிவர இருக்கும் அடர்த்தியான மரச்சோலைகளினூடே வீசும் காற்றும், தினமும் பக்தர்களால் சுத்தமாக்கப்பட்டுக் காட்சியளிக்கும் கோவில் வீதிகளும், கோவிலுக்குள் போகுமுன்பே பக்தர்களின் மனதில் ஒரு பரிசுத்தத் தன்மையை ஏற்படுகின்றன.

## செல்வச் சந்நிதியின் அமைப்பு.

செல்வச் சந்நிதியின் பெருமை அதன் உருவ அமைப்பிலோ. தமிழ் நாட்டுப் புனித ஸ்தலங்களைப்போன்ற சிறந்த சிற்ப வேலைப்பாடுகளிலோ, பெரிய கோபுர அமைப்பிலோ, தங்கியதொன்றன்று. இலங்கையிலுள்ள மற்றும் பெருமை வாய்ந்த கோயில்களைப்போல் சந்நிதியும் சாதாரண அமைப்பைப் பெற்றதுதான். கோவிலின் உள்வீதி மாத்திரம் பன்னிரண்டு பரப்புடையது. இதற்குள் முருகனின் திருமண்டபமும் அதற்கு இருமருங்கிலும் முறையே பிள்ளையார், வள்ளியம்மை, நாகதம்பிரான் ஆகிய தெய்வங்களின் மண்டபங்களும் காணப்படுகின்றன. இவற்றையடக்கி மூன்றடி உயரத்தில் ஒரு சாதாரண சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதுதான் இக்கோவிலின் அமைப்பு. கோவில் முன்புறச் சுவரோடு மணிக்கூண்டொன்று அமைக்கப்பட்டுள்ளது.

## சந்நிதியின் சரித்திரம்.

கோவிலைப்போலவே கோவிலின் சரித்திரமும் விசேட தன்மை வாய்ந்தது. ஒல்லாந்தர் இலங்கைக்கு வருமுன்னரே

இக் கோவில் இருந்துவந்தது. அதாவது போர்த்துக்கீசர் காலத்திலேயே இருந்திருக்கிறது. இக்கோவிலை முதன் முதலாக உண்டாக்கியவர்கள், அவ்வூரில் இன்று காணப்படும் செட்டி வகுப்பினரைச் சேர்ந்த முன்னோர்களாவர். ஒல்லாந்தர் காலத்திலும், அதன்பின் நம்மையாண்ட ஆங்கிலேயர் காலத்திலும் இச் செட்டி வகுப்பினரே இக்கோவிலைப் பரிபாலித்து வந்தனர். 1840ம் ஆண்டளவில் இச்செட்டி வகுப்பினர் கோவிலை "மாதர கதிர் காமர்" என்னும் ஒருவருக்கு ஆறு பவுண்களுக்கு விற்றதாகக் கோவில் சரித்திரம் கூறுகிறது.

கதிர்காமர் கோவிலை வாங்கிய நாட்களில் ஒருநாள் நள்ளிரவில் அசரீரி வாக்கொன்று கோவிலின் பூசையைக் கதிர்காமரே செய்யும்படி சொன்னதாகவும் அதற்கு அவர் தனக்குப் பூஜைசெய்யும் விதிகள் தெரியாதெனக் கூறி மறுத்த போது, அசரீரி அவருடைய வாயைத் துணியால் கட்டிப் பூசை செய்யும்படி கூறியதாகவும் கர்ண பரம்பரைக் கதையொன்றுண்டு. இன்று கூடப் பூசகர்கள் வாய் கட்டியே பூசை செய்வது கண்கூடு,

சந்நிதியை உருவாக்கிய செட்டி வகுப்பினரின் சந்ததியினர் இப்பொழுதும்கூடக் கோயிலின் அருகே அமைந்துள்ள 'செட்டியூர்' என்றழைக்கப்படும் கிராமத்தில் வசித்துவருகின்றனர். இவர்களின் குலப்பெயரே இவர்களின் ஊருக்கும் வழங்கலாயிற்று. இவர்களின் முன்னோர் கதிர்காமருக்குக் கோவிலை விற்றபோதும் கோவிலிலிருந்து முற்றாக நீங்கி விடவில்லை. கோவிலின் பரிபாலனங்களில் இவ்வகுப்பினர் அக்கறைகாட்டி வருகிறார்கள். திருவிழாக் காலங்களில் சுவாமி வலம் வந்து முடிந்ததும் வடக்கு வீதியிலிருந்து சந்நிதானம் வரைக்கும் இவர்களே பாட்டுப்பாடி அழைத்து வரவேற்பர்.

## செல்வச் சந்நிதியின் மடங்கள்.

செல்வச் சந்நிதிக்குப் பெருமை தருவது அங்குள்ள மடங்களென்றே கூறலாம். வேறெங்குமில்லாதபடி அநேக மடங்கள் இங்கு காணப்படுகின்றன. செல்வச் சந்நிதிக்கு அருகாமையில் மட்டும் நாற்பத்தைந்து மடங்கள் இருக்கின்றன. ஏறக்

குறைய ஒவ்வொரு மடத்திலும் எழுபத்தைந்து பேர் தங்கக் கூடிய வசதியிருக்கிறது. அதோடு ஒவ்வொரு மடத்திலும் அங்குவந்து தங்குபவர்களின் உபயோகத்திற்கென பாத்திரங் களும், விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாத்துக் கொடுப்ப தற்கென அரண் அறைகளுமுள்ளன. இவ்வசதிகளினால் நெடுந்தூரத்திலிருந்து வருவோர் ஒருவித தொல்லையுமின்றி தங்கிச் செல்வர்.

சாதாரண நாட்களில்கூட இம்மடங்களில் மக்களிருந்து வருகிறார்கள். ஆகவே மடங்கள் ஒருபோதும் பாவிப்பாரற்று இருக்கமாட்டா. தினமும் கடைசி ஒரு மடத்திலாவது அன்ன தானம் வழங்கப்படும். இதனால் அங்கு வசிக்கும் ஏழைகட்கு பெரும் உதவியாக இருக்கிறது.

## ஆனந்த ஆச்சிரமம்.

சந்நிதியருகே இருக்கும் ஆனந்தாச்சிரமத்தின் சரித்தி ரமே சுவையானது. அதை ஆக்கியவரும் தற்பொழுது பரி பாலித்து வருபவருமாகிய 'மயில்வாகன சுவாமி' அதை அற்புத மான முறையில் நடத்தி வருகிறார். 1940ம் ஆண்டு ஆனி மாதம் இருபதாம் தேதி ஒரு சிறிய அறையை உடையதாக ஆரம்பிக்கப்பட்ட ஆனந்தாச்சிரமம் தற்பொழுது நூற்றுக் கணக்கானோர் தங்குவதற்கு வசதியுடையதாக அமைந்துள் ளது. மயில்வாகன சுவாமியினுடைய பெருமுயற்சியும் அவ ருக்கு உதவிசெய்த பலரின் அக்கறையுந்தான் இதற்குக் கார ணம். 'பீர்பாவா' என்ற இஸ்லாமியத் துறவி தனது மாணவர் களுடன் இவ்விடத்துக்கு ஒரு சமயம் வந்திருந்தபோது இவ் வாச்சிரமத்தைக் கண்டு அதன் நடைமுறைகளில் மெய்மறந்து "மிகவும் ஆனந்தமாக இருக்கிறது" என்று சொன்ன அன்று தொடக்கம் இதற்கு 'ஆனந்தாச்சிரமம்' என்ற பெயர் வழங்கி வரு கிறது. இங்கு தினமும் மயில்வாகன சுவாமிகளின் தலைமை யில் பஜனைகளும், பிரார்த்தனைகளும் நடைபெறும். செல்வச் சந்நிதிக்கு வருபவர்களின் கவனத்தைக் கவருபவைகளில் இதுவுமொன்று.

# அந்நியர் நால்வர்.

உலகத்தின் வெவ்வேறு திக்குகளிலிருந்தும் இங்கு வந்து கூடியிருக்கும் சுவாமிகளால் சைவசமயத்தார்க்குப் பெருமையும் புகழும் உண்டாகிறது. இத்தன்மையோரில் நம்மனதைக்கவர்வோர் நால்வர். அவர்களுள் ஒருவர் ஜெர்மன் தேசத்தவர். செல்வச் சந்நிதியிலிருக்கும் முருகன்மேல் கொண்ட காதலினால் மயக்குண்டு இவ்விடமே வாசஞ்செய்கிறார். அத்துடன் சைவசமய அடிப்படைக் கருத்துக்களை நன்கு தெரிந்துகொண்டு சமயப்பிரச்சாரமும் செய்துவருகிறார். இவரைக் கௌரிபாலா என்பர். பெருமைப்படக்கூடிய மற்றொரு சுவாமி இலங்கையின் கவர்னராகவிருந்த சோல்பரி பிரபுவின் மகன். இவர் ஆனைக்குட்டி சுவாமி என்று அழைக்கப்படுகிறார். இன்று ஆனைக்குட்டி சுவாமியைப்பற்றி அறியாதோர் சைவர்களுள் ஒருவர்கூட இல்லை என்று கூறலாம். இவர் கௌரிபாலா சுவாமி அவர்களின் மூலம் சைவ சமயத்தில் பற்றுக்கொண்டு துறவு பூண்டதாகத் தெரிகிறது. இவர்களுள் ஆஸ்திரேலியா தேசத்தைச் சேர்ந்த நரிக்குட்டி என்ற சுவாமியும், தென்னிந்தியாவைச் சேர்ந்த பன்றிக்குட்டி என்றழைக்கப்படும் சுவாமியும் இருக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென அழகான குடிசைகள் அமைத்து அவற்றைச் சுத்தமாகவைத்து அவற்றில் வாசஞ்செய்து வருகின்றனர். இவர்கள் தங்களுக்குள் சைவத்தைப்பற்றி உரையாடியும், சைவ பக்தர்களுடன் சம்பாஷித்தும் சமயப்பற்றை வளர்த்து வருகின்றனர்.

---

செல்வத் திருச்சந்நிதிவாழ் முருகன்றன் சிற்றடிச்சீர்
கல்விப் பயிற்சியி னொடொருபோதிக் கடலுலகிற்
சொல்வைத்த புண்ணியர்க் கெட்டுணையாயினுஞ் சோதிடுவார்
அல்லற்படா ரடைவார மராபதி யந்தியத்தே.

காலாயுதக் கொடியோன் மயில்வாகனன் கைத்தலஞ்சேர்
வேலாயுதன் திருச்சந்நிதிவாழ் பரன் சேவடியார்
பாலாயதப்புரி சூருங்கழுதுர் பகையரவுஞ்
சூலாயுத கரனனும் பின்னிடத் தோன்றுவனே.

# கதிர்காமம்

விபுலானந்த அடிகளார்

கதிர்காமம் ஞான பூமி. ஞான சத்திதராகிய சண்முகப் பெருமான் இத்திருப்பதியிற் குருவடிவாக எழுந்தருளியிருந்து தம்மையடைந்தோருக்கு அநுக்கிரகம் புரிந்தருளுகின்றார். கதிர்காமத்தைத் தரிசிக்கும் சிவனடியார் சிவ சின்னமாகிய காவி உருத்திரமணி திருவெண்ணீறு என்னும் இவற்றை யணிந்து திருவீதியிலே யுலவுகின்ற காட்சி இருடிகணங்கள் தவம் புரிந்துறைகின்ற தபோவனங்களை நினைப்பூட்டும் தகைமை சான்றது.

மாசற்ற தெளிந்த நீரோடுகின்ற மாணிக்க கங்கையும், அப்பன் திருவிளையாடல் புரியும் செப்பருஞ் சிறப்பு வாய்ந்த மலைக்குன்றுகளும் இயற்கையின் எழில் நலத்தையும் தெய்வத் தன்மையையும் இனிதுணர்த்துகின்றன. சோலை சூழ்ந்த இச் செழும்பதியிலே அகத்திய மாமுனிவர் அருந்தவம் புரிந்து வதிந்து வந்தனரெனப் புராணங் கூறுகின்றது.

புராதனமானதும் மாட்சிமை பொருந்தியதுமாகிய இத் திருப்பதிக்கு யாத்திரை செய்யும் அன்பர் தொகை வருடந் தோறும் பல்கிக் கொண்டு வருகிறது. இவ்வாண்டிலே கதிர் காமத்தைத் தரிசித்த யாத்திரிகர் தொகை முன்பொருபோது மில்லாத பேரளவினதென அன்பர் பலர் கூறக் கேட்டோம். யாத்திரிகர் வழியில் இளைப்பாறிச் செல்வதற்காகப் பற்பல இடங்களிலும் தண்ணீர்ப் பந்தர்களும் சத்திரஞ் சாவடிகளும் அமைக்கப்பட்டிருந்தனவென அறிகிறோம். இவற்றை யமைத்த குகநேசச் செல்வர்கள் முருகப்பெருமானுடைய திரு வருளுக்காளாவர் என்பது திண்ணம். வழியில் ஏற்படும் சௌ கரியங்களைப் போலவே கதிர்காமத் திருப்பதியிலும் யாத்திரி

கருக்கு வேண்டிய சௌகரியங்கள் ஏற்படுத்தல் வேண்டும். பலர் குழுமியிருக்குமிடத்தில் நோய் முதலியன ஏற்படாவண்ணம் வசிக்குமிடங்களைச் சுத்தமாய் வைத்திருப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து வைத்தல் வேண்டும். இலங்கைத் தீவிலுள்ள சமயாபிவிருத்திச் சபைகளுள்ளே முதலில் வைத்தெண்ணப்படுவதாகிய கொழும்பு விவேகானந்த சபை இந் நன் முயற்சியிற் கையிடுமாயின், ஆகவேண்டியன நிறைவுறுமென்பதற்கையமில்லை.

ஆண்டுதோறும் ஆடித் திங்களிலே வருகின்ற கதிர்காமப் பெருவிழா, இலங்கையிலுள்ள சைவ மக்களுக்கு, ஒருவரையொருவர் கண்டு அளாவுவதற்கு வாய்ப்புடைத்தாகிய ஒரு தருணமாக அமைந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்திலும் திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலும் கொழும்பிலுமிருக்குந் தமிழர் சுப்பிரமணியப் பெருமானைத் தரிசிக்கப்போகும் இத் தருணத்தில் ஒருவரையொருவர் தரிசிக்க நேர்வதும் பெரும் பாக்கியமன்றோ! ஈசன் எமக்கு இனியனாயிருப்பது போலவே சிவனடியாரும் எமக்கு இனியராயிருக்கின்றார். சங்கமம் எனப் போற்றப்படும் சிவனடியார் திருக்கூட்டம் எமது ஈசனுடைய திருமேனிகளுள் ஒன்று என அறிஞராற் கூறப்படுவது. இத் திருமேனிக்குத் தொண்டு புரிவது பெரியதொரு சிவபுண்ணியமாமென்பது சைவ நூன்முடிபு. அஃதொருபாலாக, உடன் பிறந்தாரும், ஓரூராரும் ஒரு கோத்திரத்தாரும், ஒரு மொழியாளரும் தம்மைத்தாங் காணுங்கால் தம்முள்ளே யமைந்து கிடந்த பொதுத் தன்மை காரணமாக அன்பினால் அளவளாவுவது போலச் சைவராயினார். தம்மைத்தாங் காணுங்கால் ஆர்வமிக்க அளவளாவுதல் மரபேயாகும். இறைவனுடைய மக்களாகிய நாமெல்லாம் அன்பினால் ஒன்றுகூடி அகமகிழ்ந்திருத்தலே நாம் செய்ய வேண்டிய தொண்டுகளுள்ளே சிறந்ததொரு தொண்டாகும்.

யாழ்ப்பாணத்துத் தெரு வீதியிலே சித்தந் தெளிந்த வயோதிகத் துறவியொருவரை யாம் அடிக்கடி காண்பதுண்டு. அவருடைய உடை நடை முதலிய வெளி வேடங்களைக் கண்ணுறுவோர் அவரைப் பைத்தியக்காரரென்று தீர்ப்பிடுவர்.

ஆனல் உண்மையில் அவர் ஒரு பரம ஞானி. கையிலேதாவது பழம் பக்ஷணம் இருந்தால், அதனை உண்ணும்படி நருவார். தரும்போது "தானுண்பது மண்ணுண்பது, பிறருண்பது சிவமுண்பது," என்னும் வாக்கியத்தைச் சொல்லித்தருவர். இவ்வாக்கியத்தி னுள்ளே சிறந்த பொருளமைந்து கிடக்கின்றது. சிவனடியா ருக்குத் தொண்டுபுரிதலே சிவபெருமானுக்கு உவந்த தொண் டாகும்.

அஃதன்றியும் சைவராகிய நாமெல்லாம் சகோதர நேயம் நிறைந்து ஒன்றித்திருப்போமாயின் நம்மையசைப்பது யாவ ராலும் முடியாத காரியமாகும். சைவராகிய நாம் நம்முன்னே சகோதர நேயத்தை யெவ்வாறு வளர்த்தல் கூடும் என்பது எம்மாற் சிந்திக்கப்பாலது. உடன்பிறந்தாரும் நீண்டகாலம் பிரிந்து வாழ்வாராயின் ஒருவரையொருவர் மறந்து விடுவார். யாம் சகோதரரென்னும் எண்ணத்தை அகத்திலும் புறத்தி லும் காட்டிச் சாதனை செய்து வருவோமாயின் அன்பு வளரும் அஃதன்றியும் ஒருவருக்கொருவர் உற்றுழியுதவிச் சேவை யாற்றுவோமாயின், வளர்ந்த அன்பு உறுதியாகப் பலப்படும். ஆதலினாலேயே கதிர்காமம் போன்ற திவ்விய க்ஷேத்திரங்க ளிலே யாத்திரை செய்யும் காலத்தில் சைவராகிய நாம் அந்நி யோந்நிய சேவையினல் அன்பினல் எம்முள்ளே யியல்பாக ஏற்பட்டிருக்கிற சகோதர நேயத்தை உறுதிப்படுத்த வேண் டும்.

புண்ணிய க்ஷேத்திரங்களிலே யாம் வசிக்கின்ற காலங்க ளில் இம்மண்ணுலகிலல்ல ஒரு வானுலகிலே தேவ கணங்க ளோடு உடனுறைவதாக மனதிலே சிந்தித்து யாம் மகிழ்ச்சி யடைய வேண்டும். உண்மையும் அதுவே. எம்பெருமானும் தவத்தின் மிக்க பெரியோர்களும் தமது திருவடி தீண்ட நடந் துலாவிய பூமி கேவலம் மண்ணுலகமாகாது. சிவனடியார் நட மாடுகின்ற புண்ணிய தலங்களை அசுசிப்படுத்தலாகாது. அறி யாமையினலும் சோம்பலினலும் சிலர் அசுசிப்படுத்தினும் அவ் வசுத்தங்களை அகற்றித் தூய்மைப்படுத்தல் அறிஞர் கடன். சிவக்ஷேத்திரங்களில் வசிக்கின்ற காலத்திற் சிற்றளவு பொழு தையேனும், அவலப்பொழுதாக்குதல் கூடாது. சுவாமி தரிச

ளம் முடிந்து எஞ்சிய நேரத்தைச் சத்கால க்ஷேபத்திலும் சமயாபிவிருத்தி தமிழபிவிருத்திக்குரிய சிந்தனைகளிலும் கழிக்கலாம். சங்கப்புலவரும் தமிழ்த் தெய்வமும் ஆகிய சுப்பிரமணியப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் புண்ணிய க்ஷேத்திரத்தில் சமயாபிவிருத்திக்கும் தமிழபிவிருத்திக்கும் ஆகவேண்டிய நன்முயற்சிகளைப் பற்றி யாராய்ச்சி செய்வது மரபேயாகும். இத்தகைய முயற்சிகளையும் கொழும்பு விவேகானந்த சபை போன்ற சபைகள் முன்னின்று செய்விக்கலாம்.

சபையின் அங்கத்தவராகிய சிவனடியார் சிலர் சபையின் பிரதிநிதிகளாகக் கதிர்காம யாத்திரை செய்ய வேண்டும். விழா ஆரம்பிக்கும் தினத்துக்குச் சில நாள் முன்பாகவே கதிர்காம தலத்தையடைந்து இன்னின்ன செய்யவேண்டுமென்பதை நிச்சயித்து அங்ஙனம் செய்யவேண்டிய முயற்சிகளைத் தம்முள்ளே பாகுபாடு செய்து கொள்ளுதல் வேண்டும். பின்பு யாத்திரிகர்களுக்குள்ளே இளைஞரும் தன்னல மறுப்பு உடையோருமாகிய சிலரைத் தாஞ்செய்யும் முயற்சிகளுக்குத் துணையாகச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். பொருளுஞ்சிறிது வேண்டப்படுமாதலின் அதனை யொருவருக்கும் கஷ்டமில்லாத வண்ணம் சிறிது சிறிதாகப் பலரிடமும் பெற்றுக் கணக்குவைத்துச் செலவு செய்யவேண்டும். புராண படன சத்காலக்ஷேப நிருவாகசபை, ஆதுலருக்கு அன்னமளிக்குஞ் சபை, நோயுற்றோருக்குத் தொண்டுபுரியுஞ் சபை, திருவீதியலகிடும் சபை என்று இன்னன பல நிருவாக சபைகளை யேற்படுத்தி ஒரு மத்திய விசாரணைச் சபையையும் அமைத்துத் தொண்டுபுரியின் அத்தொண்டு பெரும் பயனைத் தரும்.

ஈண்டு நாம் கதிர்காம தேவாலயத் திருப்பணியின் சார்பாகச் சொல்லிய குறிப்புகள் ஏனைய ஸ்தலங்களில் திருவிழாக் காலங்களிலே யாம் செய்யவேண்டிய முயற்சிகளுக்கும் ஏற்புடையன. அவமாக வாண வேடிக்கையிலும் ஆடம்பரங்களிலும் செலவிடுகிற பணத்தை யெல்லாம் சிவனடியாருக்குத் தொண்டுபுரிதலில் செலவிடின் அஃதெவ்வளவு உசிதமாகும்.

# ஆரோக்கியமும் உபவாசமும்.

(சுவாமி சிவானந்த சரசுவதி அவர்கள்)

எல்லா மதங்களும், எல்லாக் கோட்பாடுகளும் ஒரே முகமாகப் புகழ்ந்து கூறும் உயர் பொருளே உபவாசம். தெய்வீக வாழ்க்கையெனும் சீரிய ஏணியின் முதற்படியே அது.

நீங்கள் எந்த வைத்திய முறையைக் கைக்கொண்டுள்ள டாக்டரிடம் சென்றாலும் உங்களைச் சோதனை செய்வதற்கு முன் அவர் உங்களிடம் வேண்டிக்கொள்வது உபவாசத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதேயாகும். ஏன்? உபவாசம் உங்களுடைய உடற்கூறு மண்டலங்கள் முழுவதையும் நன்கு தெரிந்துகொள்ள டாக்டருக்கு வகைசெய்கிறது. வயிறு நிரம்பி நிற்கும் நிலையைவிட உபவாச நிலையில்தான் நரம்பு மண்டலம் வைத்தியர்களுக்குத் தெளிவாகக் காணக் கிடைக்கிறது என்பதை இது விளக்குகிறது. உபவாசமும் உயர் விருந்தும் இரண்டுமே மனித சமுதாயத்தின் நல்லாசிகளாகும். இன்னும் அதிகம் தேவை எனும் வேட்கை ஒருசில வினாடிகளுக்கு நிலவுவதுடன் திடீரெனத் தரும் நல்லாசியையுடைய விருந்தின் தன்மை மறைந்து விடுகிறது. ஆனால் உபவாசம் அதிக நேரம் நிலைத்து நிற்கக்கூடிய வேறுவித ஆனந்தத்தை அளிக்கிறது.

வாரம் ஒரு முறையோ அல்லது இரு நாட்களுக்கிடையே ஒரு முறையோ உபவாசத்தை மேற்கொள்ளுகின்றவனின் வாழ்வைப்பற்றிச் சற்றே கற்பனை செய்து பாருங்கள். அவன் தானறியாத தன்மையில் பெற்றுள்ள தெய்வீக தேஜசினால் பிரகாசமயமாகக் காட்சி அளிக்கிறான். இறைவனிடம் ஆழ்ந்த பிரார்த்தனையில் மணிக்கணக்காக மௌன நிலையில் அவன் செலவு செய்வதால் வளர்க்கப்பட்ட அமைதியையும், சாந்தியையும் அவன் உணரத் தொடங்குகிறான். 21 மணி நேர உபவாசத்தினால் குடல் ஓய்வு பெறுகிறது. நீங்கள் மற்றப்படி

செய்வதைவிட அதிக நேரத்திற்கு உங்கள் மூளை பகவானைக் குறித்து எண்ணிநிற்கும், கைகால்கள் புத்துணர்ச்சி பெறுவதுடன், கண் பார்வையின் ஒன்றித்த நிலை ஏற்படுவதுடன், உங்கள் சக்திகள் எல்லாம் ஒழுங்காக்கப்படுகின்றன. அது ஒரு தொடர்ந்த ஆனந்தப் பெருக்கேயாகும். அவ்வரிய ஆனந்தம் உங்கள் உடற்கூறு மண்டலத்தில் தங்கிநிற்கும். அதிகமதிகம் இது பெருக்கெடுக்க அதிகமதிகம் அது வளர்கிறது. அது உங்களின் அம்சமேயாகும். அதிகரிப்பதே யல்லாமல் ஒருபொழுதும் அது குறைகிறதில்லை. முன்னேற்றத்திற்கான தோர் முறையே அது. அது முற்றிலும் மாறுபட்டதோர் தோற்றத்தை உங்களுக்குக் கொடுக்கிறது. நீங்கள் கடவுளுக்குச் சமீபத்தில் நெருங்கி வருகிறீர்கள் என்பது உறுதி. முற்கால முனிவர்கள் தங்களின் பேரநுபவத்தினால் உபவாசத்தை வாழ்வின் முக்கிய கிரமமாகப் போற்றிப் பிரசாரம் செய்தனர். எனவே, நீங்களும் இப்பொழுதே உபவாசத்தை மேற்கொள்ள முற்படுங்கள்.

---


# ஆண்டவனைக்கண்ட ஆளவந்தார்.

(ஸ்ரீ சுவாமி சிவாலந்தர்)

## அதியற்புத மூவங்க நாடகம்.

ஆத்மீக விஷயங்களைப் புகுத்தியும், ஆத்மீகக் கருத்துக்களையே பின்னணியாகக் கொண்டும் நாடகங்கள் எழுதலாம் என்பதற்கு இந்நூல் ஓர் அத்தாட்சியாகும்.

இந்தியாவில் விலை 50 நயாபைசா

இலங்கையில் விலை 1-00 ரூபா

கிடைக்குமிடங்கள் :-

26, சிவபுரம், திருநெல்வேலி ஜங்.
தென் இந்தியா.

தெய்வநெறிக் கழகம்,
தென்னக்குர்புர, கண்டி, சிலோன்.

# சுத்தானந்தரின் கடிதம்.

காட்டுப்புத்தூர்,
1918.

அண்ணு,—வணக்கம்.

கட்டளை ஸ்டேஷனில் இறங்கியதுமே மங்கள வாத்தியத்துடன் அகண்ட காவேரியின் ஸாவேரியும் கேட்டது! 'முன் பின் அறியாத ஊர்; எங்கே தங்குவோம்' என்று சிறிது யோசனை செய்தேன். நம் ஊர் கணேசையர் உறவினர், பஞ்சநத ஐயர், என்னைத் திடீரென்று அழைத்துச் சென்று கலியாணப் பொங்கல் அளித்தார். பிறகு நான் காவேரியில் குளித்து ஜபதபங்களை முடித்துக்கொண்டேன். ஐயர் என்னைப் பரிசிலில் ஏற்றி அக்கரைக்கு அனுப்பினர். அக்கரை சிலைப்பிள்ளையார் புத்தூர், அதிலிருந்து காட்டுப்புத்தூர் சுமார் மூன்று மைல். தென்னமரச்சோலை. இரண்டு பக்கமும் வயலும் சோலையுங் குலுங்குகின்றன; காலைப்பறவைகள் சந்தோஷமாகத் துள்ளிக் குதித்துப் பாடுகின்றன! உழவர் குஷியாகப் பாடுகிறார்கள்! வாழைக்கொல்லையிலிருந்து வேறே பாட்டு வருகிறது; எனக்கும் பாட்டுக் கிளம்பியது; பாடிக்கொண்டே நடந்தேன்! ஊர் வந்தது; அங்கும் மங்கள வாத்தியம்! எதிரே ஒரு கணவான் வந்தார். பள்ளிக்கூடம் எங்கே என்று விசாரித்தேன். "புதுவாத்தியாரா? வாருமையா!" என்று அவர் என்னை அன்புடன் அழைத்துச் சென்று பள்ளிக்கூடத்தில் விட்டார். அங்கே "வாரும், வாரும்!" என்று ஸயன்ஸ் வாத்தியார் உபசரித்தார். இருவரும் காட்டுப்புத்தூர் அக்கிரகாரத்திற்குச் சென்றோம். அங்கேயும் சுப்பையர் பெண்ணுக்குக் கல்யாணம். சபேசையர் வீணைக்கச்சேரி, கலியாணச் சாப்பாடு! ஏகக் கலியாணந்தான்! நான் தலைமை உபாத்தியாயரைக் கண்டு வணங்கினேன். அவர் பெரிய சங்கீத வித்துவான். என்னை எப்படியோ ஒரு கவி என்று தெரிந்துகொண்டார். பள்ளிக்கூடத்திலே எனக்கு ஜாகை அளித்தார். சாப்பாடு என்ன என்று நண்பர் கேட்டனர். நான் கமண்டலத்தில் ஊறப்போட்ட கொத்துக்கடலையையும்

பேயன் பழத்தையும் காட்டினேன்! 'இவையே உணவு' என்றேன். எல்லாரும் சிரித்தார்கள். 'இங்கே தேங்காய் பழம் ஏராளம்; நான் வெகு எளிதாக அடுப்பூதாமலேகூட வயிற்றுப் பாட்டை முடித்துக்கொள்ளுகிறேன்.; அபூர்வமாகச் சமைத்தால் ஒரு சட்டியில் அரிசி, பாசிப்பயறு, கிடைத்த காய்கறிகள் எல்லாம் போட்டுப் பாலும் விட்டு உப்புப்புளி மிளகாயே இல்லாமல் தேங்காய் தொட்டுக்கொண்டு சாப்பிடுவது வழக்கம்; இந்தச் சமயலுக்கு மாதம் ஒன்று மூன்று ரூபாயே செலவு; ஏராளமான மிச்சம்," என்றேன்.

எனக்கு ஏழாம் வகுப்பு ஸயன்ஸ் கணக்கு, ஆறும் வகுப்பு ஆங்கிலம் ஐந்து ஆறு ஏழிற்கு பூகோளம், எட்டிற்குத் தமிழ் வியாஸம் முதலிய பாடங்கள் தந்திருக்கிறார்கள். இங்கே எனக்கு ஓர் அறிஞர் நட்புக் கிடைத்திருக்கின்றது. அவரே ஸயன்ஸ் புலவர், கே. எஸ். வேங்கடராம சாஸ்திரியார். நானும் ஸயன்ஸ் சொல்லித்தருவதால், இருவரும் பாடங்களை வகுத்து முடித்தோம். நான் ஐந்து மணிநேரம் வகுப்பில் சொல்லிக் கொடுக்கும் நேரம் தவிர, தினம் மூன்றுமணி நேரம் ஸயன்ஸ் ஆராய்ச்சியிற் செலவிடுகிறேன். பூத பௌதிக ரசாயன தாவர உடல் நூல்களையும், பூகோளத்தையும், நல்ல தமிழில் எழுதி முடிக்க இரவும் பகலும் உழைத்து வருகிறேன். அதற்கு ஏற்ற சௌகரியங்களும் கிடைத்துள்ளன. அண்ணா, நமது மாணவருக்கு ஸயன்ஸ் பாடங்களையே வாசகபுத்தகமாக வைத்தால் நல்லது. அப்படியே ஐந்து முதல் பத்தாம் வகுப்பு மட்டும் பயனாகும் நூல்கள் எழுதப் போகிறேன். எனது இரண்டாம் வேலை, முன்பே என் மனத்தில் உதித்துள்ள "பாரதசக்தி" மகாகாவியத்தைப் பாடிமுடித்தல். வால்மீகி வியாசாதி மகான்களைப்போல் தவயோகத்தால் வாக்கு முதிர்ந்து இயல்பாகக் காவியம் எழுதவேண்டும்; எழுதுவேன்!

யோகசித்தி, எனக்கு மூச்சினும் முக்கியம். எனது மானசிக குருவான சதாசிவ ப்ரம்மத்தின் சமாதி இதோ நெரூரில் உள்ளது! காட்டுப்புத்தூர் எல்லைக் காவேரியைத் தாண்டினால் நெரூர். அங்கே ஓர் இலுப்பத்தோப்பில் சிறு கோயிலுள் சதாசிவ சமாதி யிருக்கிறது. ஞாயிறு தோறும் அங்கே சென்று

தியானிக்கிறேன். சில துறவிகள் உறவும் எனக்குக் கிடைத்தி
ருக்கிறது. அந்த இடத்தில் எனக்கு உபசாந்த நிஷ்டை தன்
னால் உண்டாகிறது. நிஷ்டையானதும், காவேரியின் பாட்டுடன்
நானும் ஞானகீதங்கள் பாடுகிறேன். ஊரில் பஜனை பாட்டுக்
கச்சேரிகளில் நானும் கலந்துகொள்வது உண்டு. ஆனால் ஒரு
நிமிடங்கூட வீணாக்காமல் ஒவ்வொரு மூச்சையும் அமரத்
தன்மையாக்கி வருகிறேன். உடல் இருக்கும்போதே அதைப்
பெற்ற பயனை அடைந்துவிட வேண்டும்!

எங்கள் தலைமை உபாத்தியாயர் பி. ஜி. சுந்தரமையர், புல்
லாங்குழல் போலச் சீழ்க்கை யடித்து எல்லா மேளகர்த்தா
ஜன்ய ராகங்களையும் பாடிக்காட்டுகிறார். எனக்குச் சங்கீத
ஞானமும் விசேஷமாக உண்டாகி யிருக்கிறது. பல ராகங்க
ளில் கீர்த்தனங்களும் செய்து வருகிறேன்.

ஒருதரம் மீனாம்பள்ளி ஜமீன்தார் வேங்கடாசல ரெட்டி
யார் நடத்திய சமபந்தி போஜனத்தில் சில உபாத்தியாயர்க
ளும் பிரமுகர்களும் சாப்பிட்டார்கள். ஜஸ்டிஸ் சதாசிவைய
ரும் வந்திருந்தார். சுக்கூர் சாகெபு தண்ணீர் வார்த்தபோது
படம் பிடித்துவிட்டார்கள். அதைக்கண்டு ஊர் வைதீகர், எரி
மலையாகக் கிளம்பி சமபந்தி சாப்பிட்ட பிராமணர்களை விலக்கி
விட்டார்கள். சிலர் அகத்துக்காரிக்குப் பயந்து பிராயச்சித்
தம் செய்துகொண்டு பஞ்சகவ்யம் சாப்பிட்டார்கள்! கோட
சையர் ஒருவரே தைரியமாக நிற்கிறார். அவர் உயர்ந்த எண்
ணங்கொண்டவர்; அவர் வீட்டிற்கு வைதீகர் போவதில்லை;
அவரும் அழைப்பதில்லை. நான் அவர் வீட்டில் அடிக்கடி சாப்
பிடுவதும், எனது பாடல்களைப் பாடுவதும், கீதை கம்பராமாய
ணம் படிப்பதுமாக இருக்கிறேன்.

எனக்கு இங்கே மற்றொரு புலவர் நட்புக் கிடைத்தது.
பள்ளிப் புலவர் கோவிந்தசாமி பிள்ளை, கம்பராமாயணப்புலி;
சங்க வித்துவான். நாங்கள் தினம் பள்ளிக்கூடம் விட்டதும்,
கம்பனை எடுத்துக்கொண்டு கிளம்புவோம். நான் படிப்பேன்.
அவர் விசேஷமான நயங்களைச் சொல்லுவார். சில சைவநண்
பர் வேண்டுகோட்படி நான் ஒரு முதலியார் வீட்டில் இரவு

எட்டு மணி முதல் ஒன்பது மணி வரையில் பெரியபுராணம் படித்து வருகிறேன்; புலவர் பொருள் கூறுகிறார்.

இந்த வாழ்க்கை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இப்படியே நான் ஒவ்வொரு நிமிஷமும் புதிய ஞானமும், யோக சித்தியும் பெற்றுப் புதிய மனிதனாக இறைவன் அருள் வேண்டும். அப்பா, அம்மா, முத்தண்ணா முதலிய எவ்லாருக்கும் அன்பு.

பிரியமுள்ள,

சுத்தானந்தன்.


## ஸ்ரீ முன்னேஸ்வரம்
## ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்ன நாதசுவாமி
## மகோத்சவ விஞ்ஞாபனம்.

9-8-60 துவஜாரோஹணம்.
31-8-60 சிவனடியார் திருவிழா.
1-9-60 பிக்ஷாடனர் திருவிழா.
2-9-60 நடேசர் திருவிழா.
3-9-60 வேட்டைத் திருவிழா.
4-9-60 தேர்த் திருவிழா.
5-9-60 தீர்த்தத் திருவிழா.

சிவநேசச் செல்வர்கள் அனைவரும் வந்து தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்வார்களாக.

சி. பாலசுப்பிரமணியக் குருக்கள்.,
ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான ஆதீன
பரிபாலனகர்த்தா.

ஓம்

# ஆ-சிரயம் வேண்டாம்

★

சுவாமி நிர்மலானந்தா

நம் நாட்டில் தவயோக மகான்கள் பலரை ஆசிரமம் என்ற ஸ்தாபனங்கள் பந்தப்படுத்தி, விவகாரம் ஒழித்துத் துறந்தவரையெல்லாம் பெரும் விவகாரியாக்கி விடுகின்றன. ஒரு சில மகான்கள், "எதிலும் சார்ந்துகொள்ளுவது இல்லை" என்று ஒதுங்கிச் சஞ்சாரம் செய்தும் ஏகாந்தமான இடத்தில் இருக்க நினைத்தாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காக பக்தர்களைக் கருணை நோக்குடன் கண்டு ஒரு ஸ்தாபனத்தையும் ஏற்படுத்தி அதன் மூலமாக அரிய பெரிய ஆத்மீக ஜோதியை உலகறியக்காட்டி பிரகாசிக்கச் செய்து வருகிறார்கள். சில சமயம் அவர்களுக்குள்ளும், பந்தத்தை ஒழித்துவிட்டு மறுபடியும் ஆசிரமம் என்ற பந்தத்தில் ஏன் சிக்கவேண்டும் என்று ஓடிவிடுபவரும் உண்டு. அப்படி ஓடினாலும் பக்த சீடர்களிடம் கொண்ட அன்பு மறுபடியும் இணைத்து விடுகிறது. அப்படி இணைந்த காரணத்தால்தான் இன்று திவ்விய ஜீவன சங்கம் வெள்ளி விழா நடத்துகிறது. உலகமெங்கும் அப்படி இணைக்கப்பட்ட அந்த மகானின் நாமம் பிரசித்தமாகியுள்ளது,

இமயத்தே கங்கைக்கரையில் மோனத்தவம் புரியும் ஞான ஜோதி சுவாமி சிவானந்த மகராஜ் ரிஷிகேசத்தில் ஆசிரமம் ஏற்படுத்தி 25 சீடர்களுடன் இருந்த நிலையை எண்ணும்பொழுது நமக்கு அன்று நடைபெற்ற நிகழ்ச்சி மனத்திரையில் தோன்றுகிறது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அம் மகான் மலேயாவில் டாக்டராகப் பணி புரிந்து பின் உடல் நோய்க்கு காரணம் உளநோய் எனத் தெரிந்து அதனைத் தீர்த்துவிட முனைந்து அப்பணியை உதறித்தள்ளிவிட்டு இங்கு வந்தும்கூட 25 சீடர்களின் தேவைக்காக கட்டிடம் கட்டவும், வசதி தேடிக்கொடுக்கவும் வேண்டி பந்தப்படும்படி உள்ளதே

என எண்ணினர். அதனல் ஆசிரமமே வேண்டாம் என யாரிடமும் சொல்லாது வழிச்செலவுக்காக இரண்டு ரூபாயும், ஒரு கம்பளியும் எடுத்து தோளில் போட்டுக்கொண்டு, தான் இருந்த அறையை மூடிச் சாவியை நிலையின்மேல் வைத்துவிட்டு தினசரி உலாவச் செல்வதுபோல் கங்கைக்கரையோரமாக நடந்துகொண்டே போகத் தலைப்பட்டு 20 மைல் தூரத்திலுள்ள சோளாப்பூர் என்ற கிராமத்தை அடைந்தார்கள்.

மாலை நேரத்தில் தினசரி வழக்கப்படி உலாவச்சென்ற சுவாமிகள் வெகுநேரமாகியும் திரும்பிவராது போகவே ஏங்கித் தவித்த சீடர்கள் பலவிதமாக எண்ணி பல இடங்களுக்குத் தந்தியும் அடித்தார்கள். டில்லி, ஹரித்துவார் போன்ற இடங்களுக்குச்சென்று தேடி அலைந்தார்கள். ஆனல் சுவாமிகளோ சோளாப்பூர் கிராமத்தில் கரும்பு பயிரிடும் ஒரு விவசாயியின் வீட்டில் தங்கிக் காலேடிபன், மதியச்சாப்பாடு எல்லாம் முடித்து மாலையில் அவர்கள் குடும்பத்தாரைக் கூட்டிப் பஜனையும் நடத்தினர்கள். விவசாயியின் குடும்பத்தார் அனைவரும் சுவாமிஜீயை உபசரித்து மரியாதையுடன் வழிபட்டார்கள். இன்னும் அந்த விவசாயியின் குடும்பத்தார் குருநாதருக்கு ஆடைகள், கம்பளி, பணம் முதலியவற்றைக் கொடுத்தனுப்புவார்கள். அந்தக் கிராமவாசி தன் தோட்டத்தில் விளைந்த முதல் கரும்பை ஆட்டி இரண்டு டின்கள் நிறையச் சாறு எடுத்து மக்கா சோளம் போன்றவைகளையும் வருடந்தோறும் பக்தியுடன் கொணர்ந்து தருவார். மேலும் சுவாமிகள் இருந்த அறையை பாதுகாத்தும் வருகிறர். சுவாமீஜி அங்கு வந்த இருதினங்களுக்குப் பின் தன் சீடர்கள் தன்னைக்காணது தவிப்பார்களே என்று பரிதாபப்பட்டு தன்னை ரிஷிகேசம் ஆசிரமத்தில் கொண்டு சேர்க்க ஒரு வாடகைக் கார் கொண்டுவருமாறு அந்தக் கிராமவாசியை அனுப்பிவைத்தார்கள். வாடகைக் கார் அமர்த்த வந்த இடத்தில் சுவாமிகளை தேடிவந்த சீடரும் அன்ன ஆகாரமின்றி தனது குருநாதரைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார். இந்தக் கிராமவாசி ரிஷிகேசத்திற்கு ஒரு மகானை அழைத்துப் போக வேண்டும். அதற்கு கார் வாடகை என்ன ஆகும் என்று விசாரிக்க, ஓடிவந்த சீடர், "அந்த மகான் யார்? பெயர் என்ன?

எப்படிப்பட்டவர்?" என்று கேள்விமேல் கேள்விகள் கேட்கத் தலைப்பட்டார். கிராமவாசி அனைத்தையும் விளக்கியபின் பேரானந்தம் கொண்ட சீடர் கார் எடுத்துக் கொண்டு சோளாப் பூருக்கு விரைந்தார். அங்கு சுவாமிகளைக் கண்டதும் பாதாரவிந்தங்களில் பணிந்து தாயைப் பிரிந்த கன்று சில நாட்களுக்குப் பின் தேடியலைந்து மறுபடித் தாயைக் கண்டால் எப்படித் துள்ளிக் குதிக்குமோ அந்த நிலையில் சீடர் இருந்தார். பின் ஆசிரமத்தைப் பற்றி வினவ, குருமகராஜ் தான் ஆசிரமம் வேண்டாம் என்று தான் ஓடிவந்ததாகக் கூற சீடர் ஓ வென்று அலறி அழுது அங்கு சகோதரச் சீடர்கள் குருவைப் பிரிந்ததால் உணவை நீக்கி துயரில் மூழ்கியிருப்பதைப் பற்றி விவரிக்க சுவாமிஜியின் உள்ளம் திடுக்கிட்டது. உடனே தன் கையில் இருந்த இரண்டு ரூபாயையும் கம்பளியையும் அந்த விவசாயினிடத்தில் கொடுத்துவிட்டு, "தினம் வீட்டில் தவறாது பஜனை செய்யுங்கள்," என்று உபதேசித்து காரில் ஏறி ஆசிரமம் வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் ஆசிரமவாசிகள் அடைந்த ஆனந்தம் எப்படியிருக்கும் என்பதை வாசகர்கள் அறிந்துகொள்ளலாம்.

இங்கு குறிப்பாக உள்ள விஷயம், அன்று ஆசிரமம் வேண்டாம் என்று சற்குரு பகவான் ஓடி எங்காவது தனித்த இடத்தில் இருந்து விட்டாரேயானல் இன்று எப்படி உலகம் முழுவதும் அறிய முடியும்? மேலும் சிவானந்த நகரமாகி, 25-பேர் சீடர்களாய் இருந்த இடத்தில் 250 பேர் ஆகப் பெருகியும், சிறந்த ஆசிரமக் கட்டிடமும், உருவாகியிருக்க முடியும்?

இதுபோல் 15 வருடங்கள் வரை பாத சஞ்சாரமே செய்து கொண்டு இருந்த அனந்தை மகான் ஸ்ரீ-ல-ஸ்ரீ அபேதானந்த மகராஜ் அவர்களை நாடும் பக்தர்கள் ஒரு ஆசிரமம் கட்டித் தருவதாகச் சொல்லி உபசரித்தால் இன்னும் கொஞ்சக் காலத்துக்கு "ஆ! சிரமமே வேண்டாம்," என்று சொல்லி மறுநாள் அவர்களிடம் சொல்லாது மறைந்து விடுவார். யாராவது சுவாமிகளிடம், "ஆசிரமம் எங்கு இருக்கிறது? என்று கேட்டால் ஆ! சிரமந்தான் இல்லாது இருக்கிறது என்பார்கள்.

அப்படிச் சொல்லி வந்த மகான் தற்போது இரண்டு ஆசிரமங்களுக்கு பந்தமும், ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு கிருபை தரக்கூடிய பாக்கியமும், யாரும் நினைக்காததும் எளிதில் செய்ய முடியாததுமான கோடியார்ச்சனைகளை நான்கு இடங்களில் நடத்தி அங்குள்ள மக்களுக்கும், பாரத நாட்டுக்கும் பக்தி மார்க்கத்தை வளர்த்து வருவதாலான பெரு நன்மை புரிந்து ஆ! சிரமம் வேண்டாத இம் மகானுக்கு இந்த மகா சிரமம் லோக க்ஷேமத்தின் நிமித்தம் ஏற்பட்டது.

இப்படியே வட நாட்டில் பிருந்தாவனத்தில் உள்ள "ஹரி பாபா" என்ற பஜனானந்தருக்கு பஜனை செய்வது என்றால் ஒரு ஆனந்தம். 80 வயது கிழவரான இவர் கீர்த்தனை செய்யும் கூட்டத்துடன் கலந்து இருப்பது என்றால் பெரு வியப்பே! அவரும் சில சமயம் யாருடனும் சொல்லாது ஓடி ஏதாவது கிராமத்தில் இருந்து கொண்டு அங்கு பஜனைகள் செய்து வருவார். அங்கு பெருங்கூட்டம் கூடும். பாபாவைக் காணாது தவிக்கும் பக்த கூட்டத்துக்கு தகவல் கிடைக்கும். இரு கூட்டமும் கூடி பக்தி வெறியில் பகவத் நாமத்தை கீர்த்தித்து ஆனந்தத்தாண்டவம் ஆடி மகிழ்வர். இப்படி மகான்கள் ஆசிரமம் வேண்டாம் என்று ஓடியிருந்தால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள், பேறுகள் நமக்கு கிட்டியிருக்குமா?

ஸ்ரீ ரமண பகவான் விருபாக்ஷி குகையில் இருந்து இருப்பாரானால் இன்று அவர் உபதேசித்த கருத்துக்களை உலகம் எப்படி அறிய முடியும்? ஸ்ரீ அரவிந்த கோஷ் புதுவையில் எவருக்கும் தெரியாமல் இருந்திருப்பாரானால் இன்று அவர் எழுதிய நூல்களைப் படிக்கும் வாய்ப்பிருக்குமா? எவ்வளவு பேர்களுக்கு அவரது ஆசிரமம் அமைதியளித்து வருகிறது. இது போல பல மகான்களின் ஆத்மீக சக்தி அவர்கள் ஆசிரமம் மூலமாகத்தான் வெளிப்படுகிறது.

ஆசிரமம்; ஆ! சிரமம்; பெரிய சிரமந்தான் மகான்களுக்கு. ஆனால் பெரிய கிராமங்களால் அமைதியற்று தவிக்கும் மக்களுக்கு ஆசிரமம் லோக க்ஷேமஸ்தலம் ஆகிறது. தற்காலத்தில் நமது நாட்டில் எல்லா ஆசிமங்களிலும் பக்தி வளர்க்கப்பட வேண்டும். அப்படியில்லாத ஆசிரமம் வேண்டாம். தெய்வீக வாழ்க்கை நெறியை வளர்க்கும் ஆசிரமங்கள் வளர்ந்தோங்க வேண்டும். பக்தி நெறி ஓங்க வேண்டும், மகான்கள் பல்லாண்டு வாழ்ந்து லோக க்ஷேமத்திற்காகப் பாடுபடவேண்டும்.

## திருவனந்தபுரம் அபேதாஸ்ரமத்தில்
# லிகித நாம ஜெப மகா யக்ஞம்.

திருவனந்தபுரம் கோட்டைக்குள் பத்மதீர்த்த குளக்கரையில் அமைந்துள்ள அபேதாஸ்ரமத்தில் 28-7-60 திகதி முதல் 1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் வரையும் லிகித நாம ஜெப மகா யக்ஞம் (மகா மந்திரம்) ஆரம்பமாகியுள்ளது. 3½ கோடி மந்திரம் எழுதிய புஸ்தகங்களை எல்லாம், ஆஸ்ரமத்தில் இனி பிரதிஷ்டையாக இருக்கும் நாம வடிவான ஸ்ரீ அநுமான் ஆலயத்தின் அடியில் இட்டு மூடப்படும். இந்த மகா யக்ஞத்தின் முடிவில் ஸ்ரீ கணபதிக்கும் ஸ்ரீ அநுமானுக்கும் ஆலயம் அமைக்கப்படும். பத்து தினத்தில் 3½ கோடி அர்ச்சனையும் நடைபெறும்.

இந்த யக்ஞத்தில் கலந்து மகா மந்திரம் எழுதுபவர்கள் அபேதாஸ்ரமத்தில் இருந்து தினம் 500 மந்திரம் வீதம் எழுதி முடிவில் ஒன்றேகால் லட்சம் மந்திரம் எழுதித் தர வேண்டும் வெளியிலிருந்து எழுதி அனுப்பும் மந்திர புஸ்தகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இந்த மகா யக்ஞம் முடியும் வரையும் சுவாமி அபேதானந்த மகராஜ் எங்கும் வெளியூர்களுக்கு செல்ல மாட்டார்கள். அனைவருக்கும் தெரிசனம் கிடைக்கும். தினமும் ஆஸ்ரமத்தில் பஜனையும் உபன்னியாசங்களும் நடைபெறும்.

---

# திவ்ய ஜீவன சங்க நிகழ்ச்சிகள்.

இடம்:—சிந்தி ஜனசமூக மண்டபம், 32, 11ர் ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி

**10-9-60** பி. ப. 3-30 மணி - அகில இலங்கைத் திவ்ய ஜீவன சங்கம் அரசாங்கத்தினால் பதிவு பெறுதற்கான சட்ட திட்டங்களை ஆலோசித்தலும் நிர்வாக சபை அமைத்தலும்.

பி. ப. 6-00 மணி – சுவாமி சிவானந்த சரசுவதி அவர்களின் 74 ஆவது ஜயந்தி விழாக் கொண்டாடுதல்.

**11-9-60** மாலை 5-00 மணி - சர்வசமய சம்மேளனம் கூடுதல்.

மேற்படி நிகழ்ச்சிகளில் பல பெரியார்கள் சொற்பெருக்காற்றுவார்கள்.

உ

ஓம்

### காரைத்தீவு

# பாலையடி ஸ்ரீ வாலவிக்னேஸ்வரர் துதி.

### காப்பு

நீரேறு செஞ்சடையன் நீள்புவிக்குத் தந்தகலைச்
சீரேறு யானைமுகச் செம்மலே! - காரேறு
தீவகத்தோய்! உன்கழற்சீர் செப்பிடநீ யல்லாமல், என்
நாவகத்துக் குண்டோ நலம்?

### துதி.

*ஈரறத் தலைவன் ராம
கிருஷ்ணரின் இணைத்தே னுண்டு,
சீருற்ற விபுலா னந்தச்
செல்வனைப் பெற்ற தாலே,
"பேர்பெற்ற" தென்னும் காரை
தீவினைப் பெற்ற, மூல
காரணக் களிற்றின் ஞானக்
கழலிணை கருத்துள் வைப்பாம். 1

தெங்குடன் கமுகு போட்டி
செய்து, கார் தழுவ ஓங்கும்
மங்கலத் தமிழின் பத்தேன்
மல்குகா ரேறு தீவில்
ஐங்கரத் தொடுமெய் யன்பர்க்
கருள்தர விரைந்து நோக்கும்
துங்கவெண் கொம்பன் இன்பச்
சுடரடி சிரத்திற் கொள்வாம். 2

கதலி,தே மா,ப லா,தேன்,
கற்கண்டு, தேங்காய், வெல்லம்,
அதிரசம், மோத கங்கள்,
அப்பமும் பொரியும் வைத்துத்

---

* இல்லறம் துறவறம்

துதிசெய்தோம்; எங்கள் கன்மத்
துயரறுத் தின்ப வாழ்வுக்
கதியருள் பவள மேனிக்
கணபதி! கருணை மூர்த்தி! 3

மரகதக் கிள்ளை பெற்ற
மாணிக்கப் பிள்ளாய்! பக்தி
விரகத்தை மூட்டி, ஆற்றும்
வித்தக மணியே! சற்றும்
அருகதை யிலையென் றெள்ளி
அடிமையைப் புறக் கணித்தல்
தருமமோ? கருணை யோசொல்?
தாயுருக் கொண்ட வள்ளால்! 4

பிரணவ வடிவ மாகப்
பேருல கெங்கும் நின்று,
அருணெறிச் செல்வர்க் கின்பம்
அளித்திடும் அமுதே! பாழும்
இருணெறிப் பட்ட பேதைக்
கின்பத்தின் கரையைக் காணக்
கருணைபா லிக்கொ ணுதோ?
கற்பகக் களிற்றுப் பிள்ளாய்! 5

அருந்தமிழ்க் கிழவிக் கன்று
அவசர மின்றிப் பூசை
புரிந்திடப் பணித்துக் கைலைப்
புனிதன்முன் கணத்திற் சேர்த்த
பெருந்தகைக் குன்றே! ஞானப்
பேரருள் வடிவே! ஏழை
வருந்திடு முறைகே ளாத
மர்மமென்? வாலைப் பிள்ளாய்! 6

ஞானவிண் ணகத்துள் நின்று
நற்றவ ம்ணிகட் கின்பத்
தேன்மழை பொழியும் சுத்த
சின்மய முகிலே! நாளும்

நானெனும் அகந்தைப் பேயால்
நைந்திடும் பேதை வாழ்வில்
ஆனந்தம் தழைக்க உன்னை
யன்றி,யார் அருளு வாரே? 7

மூலத்தில் முழங்கி, ஓங்கும்
மும்மதக் களிறே! வேலை
ஆலத்தை யுண்ட கண்டன்
அருளிய கனியே! அன்பர்
ஓலத்திற் கிரங்கிப் பாலை
யடியிற்பே ருருவங் கொண்ட
வாலவிக் னேச! நின்றன்
மகிமையை அறிவார் யாரே? 8

வானத்தில், காற்றில், தீயில்,
மண்ணில், தண்ணீரில் எல்லாம்
மோனமாய்க் கலந்தும், அப்பால்
முதிர்ந்தபே ரகண்ட மாக
ஊனக்கண் ணுக்கெட் டாமல்
உறைந்தும்,நல் லுறுதி வாய்ந்தார்
தியானத்திற் கெளிய னுயும்
தழைத்திடும் சக்தி வேந்தே! 9

சித்தானைக் குட்டி யென்னும்
சித்தனும், விபுலா னந்த
வித்தக மணியும், பின்னோர்
வீர நடேசா னந்த
பக்தனும் தோன்றச் சித்தம்
பாலித்தாய் காரை தீவில்!
எத்தனை இன்னு முண்டோ?
எளியரால் உணரப் போமோ? 10

மா,பலா, கதலி, தென்னை
வளம்பெற மருவு காரை
தீபகப் பாலை வாழும்
செல்வனே! சேயேன் செய்த

பாபங்கள் அகல ஞானப்
பரிதிக்கண் பாராய்! ஏக
ரூபனே, விக்னம் போக்கும்
நுண்கலா பவன மூர்த்தி! 11

வறுமைநோய், மடமைப் பேய்கள்
வாழ்க்கையைக் குலைத்தி டாமல்,
சிறுமைநாய்க் குணங்கள் என்னைச்
சீரழிக் காமல் அன்பு
பொறுமை,பே ரறிவு, செல்வம்
புகழுடன் ஞான மெய்தும்
நறுமண வாழ்வை நல்காய்,
நாதனே, விக்கி னேசா! 12

மாதமும் மாரி பெய்து
வளம்பல பொலிய வேண்டும்;
ஈதல்,அன் பிரக்கம், வாய்மை
எங்கிலும் தழைக்க வேண்டும்;
சாதிபே தங்க ளற்ற
சன்மார்க்கம் செழிக்க வேண்டும்;
வேதநா யக,நின் நாமம்
உலகெலாம் விளங்க வேண்டும்! 13

நல்லவர் உளத்தில் இன்பம்
நல்கிடும் அமுதே, போற்றி!
அல்லரைத் துன்பு றுத்தி
ஆட்கொளும் அருளே, போற்றி!
வல்லபைக் குகந்த ஞான
வடிவமே, போற்றி! எங்கும்
எல்லையில் லாதுறைந்த
எந்தையே போற்றி! போற்றி! 14

★ ★

ஓம்

# நாமலிகித ஜெபம்.

(நா. முத்தையா)

இறைவனிடம் உள்ளம் நிறைந்த வேட்கை கொள்ளுவதே பிரார்த்தனை எனப்படும். தூல உடலுக்கு உணவு அவசியமாவது போல உள்ளத்திற்குப் பிரார்த்தனை அவசியமாகின்றது. பிரார்த்தனையைப் புறக்கணித்து விட்டதொன்றே இக்காலத்தில் உலகமெங்குங்காணப்படும் சாந்தியின்மைக்கு மூல காரணமாகும்.

உலகின்கண் நமக்கு மிகப் பிடித்தமான பொருள்கள் எல்லாவற்றையும்விட பகவானே நமக்கு மிகமிக அன்புக்குரியவர் என்ற உணர்ச்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் திடம்பெற்றிருக்கவேண்டும். இறைவனே தான் நம்முடைய நிஜமான அந்தராத்மாவாக உள்ளார். அவரை அடைதலே மனிதப்பிறவியின் பயனாகும். இக்கலியுகத்தில் ஜபமே கடவுளை அடையும் சுலபமான வழி. ஆசாரிய மகானாகிய மதுசூதன சரஸ்வதி சுவாமிகள் கிருஷ்ணமந்திர ஜபத்தினால் ஸ்ரீ கண்ணபிரானை நேரில் கண்டு தரிசித்தார். வித்யாரண்ய சுவாமிகள் காயத்ரீ ஜபத்தினால் லோகமாதாவாகிய காயத்திரீ தேவியை நேரில் கண்டு களித்தார்.

பகவானுடைய ஏதாவது ஒரு மந்திரத்தையோ, நாமத்தையோ திரும்பத்திரும்பக் கூறுவது ஜபமாகும். திரும்பத் திரும்ப எழுதுவது லிகித ஜெபமாகும். துகாராம், பிரகலாதன், வான்மீகி, துருவன் ஆகியோருடைய சரித்திரங்கள் நாம ஜபத்தின் மகிமையை விளக்குகின்றன. கிருஷ்ணபரமாத்மா கீதையில் 'யக்ஞங்களில் நான் ஜப யக்ஞம்" என்று கூறுகிறார். ஜப யோகத்தைவிடச் சாலச்சிறந்த யோகம் பிறிதொன்று கிடையாது.

ஜபத்தில் மூவகை உண்டு. "வைகரி" ஜபம் அல்லது உரக்கச் செய்யும் ஜபம் வேதங்களில் கூறப்பட்ட பலனையளிக்கிறது: "உபாம்சு" ஜபம் அல்லது பிறர் கேளாதவாறு மெதுவாகச் செய்யும் ஜபம் வைகரி ஜபத்தைக்காட்டிலும் ஆயிரம்

மடங்கு பலனையளிக்கிறது; "மானஸிக" ஜபமோவெனில் வைகரி ஜபத்தைக்காட்டிலும் கோடிப்பங்கு அதிகமான பலனையளிக்கிறது. ஜபத்தின் முக்கிய நோக்கம் தியானத்தில் லயித்தலாகும். அதாவது உள்ளம் இறைவனில் பொருந்துதலாகும்.

லிகித ஜபம், மேற்கூறிய மூவகை ஜபங்கள் கொடுக்கக் கூடிய பலன்களில் மிக அதிகமான பலன்களைக் கொடுக்கிறது. இஷ்ட மந்திரத்தை எழுதும்போது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் ஈடுபடுவதோடு பரிசுத்தமும் அடைகின்றன. மனது இஷ்டமந்திரத்தைத் தியானிக்கிறது. வாய் மிக மென்மையான சத்தத்தில் உச்சரிக்கிறது. கை எழுதுகிறது. திரிகரணங்களும் தொழிற்படுகின்றன. இதனுல் திரிகரணசுத்தி ஏற்படுகின்றது. மானசிக ஜபம் நடைபெறும்போதே அம் மந்திரத்திற்குரிய இறைவனது திருஉரு மனதில் தோன்றுகின்றது. அத் திருஉருவில் மனது லயித்தலே தியானமாகும்.

இடைவிடாத ஜபத்தினுலும், வழிபாட்டினுலும் மனம் பரிசுத்தப்படுத்தப்படுகிறது. அது நல்ல தூய எண்ணங்களால் நிரப்பப்படுகிறது. இறை வணக்கம், மந்திர பாராயணம் முதலியவை நல்ல சம்ஸ்காரங்களைப் பலப்படுத்துகின்றன. இறைவனது திருப்பெயரின் உச்சரிப்பு அல்லது எண்ணம் மனதில் மிகச் சிறந்ததோர் சக்தியை உண்டுபண்ணுகிறது. அது சித்தத்தை மாற்றி யமைக்கிறது. சவர்க்காரம் துணியிலுள்ள அழுக்கை அகற்றித் தூய்மையாக்குவது போல் ஜபப்பயிற்சி மனத்தின் மலங்களை அகற்றுகிறது. நீ ஜபம் செய்வதில் ஒழுங்காயிரு. ஜபம் பாவங்களை அழித்துப் பக்தனைக் கடவுள் சந்நிதியில் கொண்டுவருகிறது.

பிரதி தினமும் ஒரு தனிப்பட்ட கொப்பியில் குருவின் உபதேச மந்திரத்தையோ அன்றி இஷ்டதேவதையின் மந்திரத்தையோ அரைமணி நேரமாவது எழுதிவருதல் நல்லது. மந்திரத்தை எழுதும்போது மௌனம் சாதிக்கவேண்டும். மந்திரத்தை மையில் பேனுவைக்கொண்டு தெளிவாக எழுதுக. ஞாயிறுதோறும் குறைந்தது ஒரு மணித்தியாலமாவது எழுதுக. நண்பர்களை எல்லாம் ஒன்றுகூட்டி அவர்களையும் நாம

லிகித ஜபத்தில் ஈடுபடச் செய்க. இந்த லிகித ஜபத்தினால் மனதின் ஒன்றுபடுந்தன்மை வெகு அற்புதமாய் விருத்தி அடைகின்றது. குடும்பமாகவே லிகித ஜபத்தில் ஈடுபடலாம். கணக்கிலடங்காத தெய்வீக பலன்களை லிகித ஜபத்தினாலடையலாம்.

---

**லிகித ஜபத்திற்குப் பின்வரும் விதிகளைப் பின்பற்றுக:-**

1 முதலில் தேர்ந்தெடுத்த நாமத்தையோ மந்திரத்தையோ இடையில் மாற்றக்கூடாது. ஒரே மந்திரத்தை எழுதுவதினால்தான் கெதியில் மந்திரசித்தி அடையலாம்.

2 ஒழுங்கும் தொடர்ச்சியும் இன்றியமையாதது.

3 உடலும் மனதும் சுத்தமாய் இருத்தல் வேண்டும். ஜபம் எழுத உட்காருமுன், கைகால், முகம், வாய்களை நன்றாக அலம்ப வேண்டும். உலக எண்ணங்களை மனதினின்று விரட்டி ஓட்டுக.

4 ஒரே ஆசனத்தில் அமர்ந்திருந்து எழுதவேண்டும். அடிக்கடி ஆசனத்தை மாற்றக்கூடாது. ஆசனத்தை மாற்றுவதனால் மன உறுதி தளருகிறது.

5 தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் நல்லது. அதனால் அந்த நேரத்திற்கே ஒரு சக்தி உண்டாகிறது.

6 மந்திரம் எழுதும்போது மௌனம் சாதிக்க வேண்டும். அங்குமிங்கும் பார்க்கக்கூடாது. கொப்பியிலேயே கவனம் முழுவதும் இருக்கவேண்டும். இது மனது ஒன்றுபடுதற்கு உதவுகின்றது.

7 மந்திர ஜபத்தை எழுதும்போது மானஸிகமாய் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டிருத்தல் வேண்டும். ஒருமுறை எழுதுவதற்கிடையில் மூன்றுமுறை ஜபித்து விடலாம். இப்படி உள்ளும் புறமும் மந்திர ஜபத்தில் மூழ்கிவிடுக.

8 ஒருதடவை மந்திர ஜபம் எழுத உட்கார்ந்தால் குறைந்த பட்சம் இத்தனை எண்ணிக்கை ஜபம் ஆகவேண்டும் என்ற தீர்மானம் இருக்க வேண்டும்.

9 லிகித ஜபம் ஆரம்பித்தால் அன்றையக் கணக்கு அளவு ஜபம் எழுதி முடித்தாலன்றி இடத்தைவிட்டுப் பெயரக் கூடாது.

10 லிகித ஜபத்திற்குரிய கொப்பி இறைவனைப்போல் பரிசுத்தமாகக் காக்கப்படவேண்டியதொன்றாகும்.

---

1-4-60 தொடக்கம் 31-5-62 முடிய உள்ள 25 மாத காலத்திற்குக் கொண்டாடப்படுகின்ற

**தெய்விக வாழ்க்கைச் சங்க வெள்ளி விழாவில்**

**நாம லிகித ஜபம்**

என்பதும் ஓர் முக்கிய நிகழ்ச்சியாகும்.

இந்நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்ற வேண்டும் என்பது எமது அவா.

**25 கோடி நாமம் எழுதி ரிஷிகேசம் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களுடைய பாத காணிக்கையாகச் சமர்ப்பிப்பதே இலங்கை அன்பர்களுடைய திட்டமாகும்.**

இப் பாதகாணிக்கையில் எல்லா அன்பர்களும் பங்கு பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

உங்கள் ஒவ்வொருவர் நாமத்தொகையையும் பிரதி மாதமும் 5ம் தேதிக்கு முன்

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி**

என்ற விலாசத்திற்கு அனுப்புக.

# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்க
# வெள்ளிவிழா

## நாமலிகித ஜெபம்

### யூலாய் மாதம் முடிய உள்ள கணக்கு விபரம்

| | |
|---|---|
| யூன் மாதக் கணக்கு | 3148839 |
| மாத்தளை | 7920 |
| யாழ்ப்பாணம் | 6882 |
| உடுவில் | 4222 |
| கொத்மலி - கறங்கல | 130000 |
| மட்டக்களப்பு | 6160 |
| கினிகத்தேனை - அல்லித்தோட்டம் | 51924 |
| கொழும்பு | 86594 |
| காலி எல | 3520 |
| இரத்தினபுரி – லான்ஸ்டன் தோட்டம் | 341067 |
| கொட்டகலை - மண்வெட்டித்தோட்டம் | 62670 |
| பருத்தித்துறை | 8500 |
| கொத்மலி – உனுகலோயாத் தோட்டம் | 65520 |
| கற்றன் | 2811 |
| கலபொட | 9200 |
| தெல்லிப்பழை | 12960 |
| நோட்டன் – கிரிவான் எலியா | 14658 |
| மாவிட்டபுரம் | 7200 |
| காங்கேசன் துறை | 7668 |
| காரைநகர் - குருகுல இல்லம் | 225592 |
| நாவலப்பிட்டி | 10 6745 |
| கிளிநொச்சி | 57492 |
| மூதூர் – கொட்டியாபுரம் | 57669 |
| திரிகோணமலை | 720000 |
| கொத்மலி – பார்க்கேபிள் | 15175 |
| றத்தோட்டை | 168320 |
| மொத்தம் | ***6262308*** |

Registered at the G. P. O. as a News Paper M. L. 59-300


# வாய்வு சூரணம்.

உஷ்ணவாய்வு. முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மல பந்தம், அஜீர்ணம், கைகால் அசதி பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்த மயக்கம், பித்த சூலே, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த சூரணம்.

உபயோகிக்கும் முறை.

இந்தச் சூரணத்தில் அரை தோலா அளவு எடுத்து அத்துடன் அரை தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலே மாலே தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக்கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய், நிறையச் சாப்பிடலாம். வாரம் ஒரு முறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினல் தயாரிக்கப் பெற்றது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4 ரூ 25 ச

இலங்கையில் கிடைக்குமிடம்

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

இந்தியாவில் கிடைக்கும் இடம்:-

சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2. (S.I.)

மலாயாவில் கிடைக்குமிடம்;-

மு. கணபதி அன் கம்பெனி

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ.


---

# சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும், சந்தா அனுப்பும் போதும் விலாசமாற்றம் செய்யும்போதும் தங்கள் சந்தா இலக்கங்களைத் தவருது குறிக்குமாறு வேண்டுகின்ரேம். விலாச மாற்றம் செய்வோர் புதய பழைய விலாசங்கள் இரண்டையும் தெளிவாக அனுப்புக ஒரே பெயரில் பலர் இருக்கிருர்கள். அதனல் பிழைகள் நேரவுங்கூடும். இன்றுவரை சந்தா அனுப்பாதோர் உடன் அனுப்பி வைக்க வேண்டுகின்ரேம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம் 2.

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ்விடமும் அறியத்தருக

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி (சிலோன்)

Printed & Published by Mr. N. Muthiah,
"Athmajothi" Nilayam, Nawalapitiya.
at RAJAH PRESS, Theatre Road, Nawalapitiya. (Ceylon.) 16-8-60.